இலக்குவனாரின் மாணவராம் பெரியவர் தோழர் நல்லகண்ணு அவர்களின் நேர்மைமிகு கைகளால், தொடங்கப்பட்டுள்ள பேரவையைத் திறம்பட வளர்ப்போம்.


தொகுப்பு :

**இலக்குவனார் இலக்கியப்பேரவை**

14, இராசாசி தெரு, விநாயகபுரம்,

அம்பத்தூர், சென்னை - 53.

தொ.பே.: **26582496** செல் : **9444488507**

ஒருங்கிணைப்பாளர்:

கவிஞர் **செம்பை சேவியர்**

தொ.பே.: **26582257**



*ஸ்லேஷ் எலக்ட்ஸ், தொ.லே. 9282142789*






# இலக்குவனார் யார்?

இலக்குவ னாரா? இவர்யார் எனநீர்
வினவுதி ராயின் விடையிறுப் பேன்யான்
**சங்கத் தமிழை வங்கக் கடலில்**
**எறிவோம்** என்றே எள்ளிய வர்க்கு
**சங்கத் தமிழ்பாடித் தமிழர்புகழ் வளர்ப்ப** மென்று
சிங்க முழக்கமிட்டுச் செயலில் காட்டியவர்;
ஆசிரியப் பணியோடு அன்னைத் தமிழ்ப்பணியும்
அமைந்ததே தம்வாழ்வின் அரிய பணியென்று
அலையலையாய் வந்தபல எதிர்ப்புகளைத்
தம்செயலால்
**உலையெரிமுன் தூசுபோல்** ஊதிவென்ற
உரமுடையோர்;
மொழிப்போரில் மூன்றுதிங்கள் தன்னுடனே
இருப்பதற்கு
**சிறையே தவம்செய்த** சீமான்; அவர்தாம்நம்
செந்தமிழ்க் காவலர் **சி. இலக்குவ னாராம்**!

*புலவர் உ. தேவதாசு*
செயலர்
இலக்குவனார் இலக்கியப் பேரவை

# பேராசிரியர் சி.இலக்குவனார் பற்றிய அறிமுகம்

*சலுகை போனால் போகட்டும் - என்*
*அலுவல் போனால் போகட்டும்*
*தலைமுறை ஒருகோடி கண்ட - என்*
*"தமிழ்" விடுதலை ஆகட்டும்*

என்ற புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனாரின், பாட்டு இலக்கணத்திற்கு இலக்கியமாக வாழ்ந்த நம் இலக்குவனார், தஞ்சை மாவட்டம், திருத்துறைப் பூண்டி வட்டத்திலுள்ள 'வாய்மேடு' என்னும் சிற்றூரில், சிங்காரவேலருக்கும், இரத்தினம் அம்மையாருக்கும் 17.11.1910 ஆம் ஆண்டு பிறந்தார். அங்கேயே, திண்ணைப் பள்ளிக் கூடத்தில் தொடக்கக் கல்வி கற்றார்.

'இராசாமடம்' என்னும் ஊரில் நடுநிலைக் கல்வி கற்றார். 'தமிழர் தலைவர்' என்று பெரியாரைப் பற்றி நூல் எழுதிய 'அறிஞர் சாமி சிதம்பரனார்' இவருக்கு ஆசிரியராவார் 'ஒரத்தநாட்டில்' உயர்கல்வி முடித்துவிட்டு' 'திருவையாறு அரசர் கல்லூரியில்' புலவர் பட்டம் பெற்றார். கரந்தைக் கவியரசு அரங்க வேங்கடாசலம் பிள்ளை, இவருடைய பேராசிரியப் பெருமக்களுள் ஒருவராவார். பிற்காலத்தில் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்த அன்பு கணபதி அவர்கள், இவரோடு உடன்பயின்றவராவார்.



## கல்லூரிக் கல்வியும் பட்டமும்:

1936ல் திருவாரூர் கழக உயர்நிலைப் பள்ளியில், தமிழாசிரியராகத் தம் பணியைத் தொடங்கினார். படிப்படியாக உயர்கல்வி பெற்று பி.ஓ.எல்; எம்.ஏ ஆகிய இருபட்டங்களையும் பெற்றார். 'தமிழ் மொழியின் தோற்றமும் வளர்ச்சியும் (Origin and Growth of Tamil Language) என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில், ஆய்வுக் கட்டுரை எழுதி எம்.ஓ.எல். பட்டமும் பெற்றார்.

அகவை அய்ம்பதைத் தாண்டிய பிறகும், அயர்வின்றி உழைத்து 'தொல்காப்பியம்' முழுமையையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, ஆராய்ச்சிக்கு முன்னுரையும் விரிவாக எழுதி, முனைவர் பட்டமும் பெற்றார்.

## தமிழ்ப்பணியாற்றிய இடங்கள் :

திருவாரூர் உயர்நிலைப்பள்ளி, தஞ்சை மாவட்ட கழகப் பள்ளிகள், திருவையாறு அரசர் கல்லூரி, திருநெல்வேலி தாயுமானவர் இந்துக் கல்லூரி, விருதுநகர் செந்தில் குமார நாடார் கல்லூரி, திருவெறும்பியூர் முக்குலத்தோர் உயர்நிலைப்பள்ளி, ஈரோடு மகாசனக் கல்லூரி, நாகர்கோயில் தெ.தி.இந்துக் கல்லூரி போன்ற இடங்களில், பேராசிரியராக இருந்து, தமிழ்ப்பணி ஆற்றியதோடு, ஊர்கள்தோறும் நடையாய் நடந்து மக்களுக்குத் தமிழுணர்வை ஊட்டினார்.

மதுரை, தியாகராசர் கல்லூரியில் ஆறு ஆண்டுகள், தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியபொழுது, 'தமிழ்க் காப்புக் கழகம்' தொடங்கி, மக்களிடையே, விழிப்புணர்வை ஊட்டினார்.

தமிழ்க் காப்புக் கழகத்தின் முதல் கூட்டத்தில், அன்றைய கரந்தைப் புலவர் கல்லூரி முதல்வரும், பிற்காலத்தில், சென்னை பெரியார் அஞ்சல்வழிக் கல்லூரியின் முதல்வராக இருந்துஅரும்பணியாற்றியவருமான பெரியார் பேருரையாளர், பெரும்புலவர். பேராசிரியர் **ந. இராமநாதன்** அவர்கள் கவிஞன் உள்ளம் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

'வணிகவிளம்பரப்பலகைகள், செய்தித்தாள்கள் போன்றவைகள், தூயதமிழில் இருக்க வேண்டுமென, இத்தமிழ்க் காப்புக் கழகம் மூலம் போராட்டம் நடத்தினார்.

1965 ஆம் ஆண்டு தமிழகத்தில் நடை பெற்ற 'இந்தி எதிர்ப்புப் போரில்' ஈடுபட்டதால், அன்றைய அரசின் அடக்குமுறையால், 'இந்திய பாதுகாப்புச் சட்டப்படி' (Defence of Indian Rules) சிறைத் தண்டனை பெற்றார்.

'இந்திய மண்ணில், ஒரு மொழிக்காக, மொழிப் பேராசிரியர் ஒருவர் சிறை சென்றது வரலாற்று நிகழ்வாகும், மூன்று திங்கள் சிறைத் தண்டனை பெற்றதுடன் அதற்காகப் பேராசிரியர் பதவியையும் இழந்தார். 1967ல் பேரறிஞர் அண்ணாவின் தலைமையில், திராவிட முன்னேற்றக் கழக அரசு, ஆட்சிப் பொறுப்பை



ஏற்றதும், சென்னை மாநிலக் கல்லூரியில் பேராசிரியராக இலக்குவனார், பேரறிஞர் அண்ணா அவர்களால், மீண்டும் பணி அமர்த்தப்பட்டார்.

அண்ணாவின் மறைவிற்குப்பின், ஐதராபாத்தில் உள்ள 'உசுமானியாப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றினார். அதன்பின் நாகர்கோயில் தெ.தி. இந்துக் கல்லூரி முதல்வராகி, ஓய்வு பெற்றார்.

**தமிழியக்கப் பணிகளும், இதழ்களும்:**

ஆசிரியப்பணியைத் தொடங்கியதும், பள்ளியில் 'தொல்காப்பியத் திருநாள்' முதன்முதலில் கொண்டாடினார்.

திருவையாறு அரசர் கல்லூரியில் பணியாற்றிய பொழுது, தொல்காப்பிய விழாவோடு, திருவள்ளுவர் விழா, இளங்கோவடிகள் விழா போன்ற விழாக்களைக் கொண்டாடி, தமிழுணர்வை ஊட்டினார்.

விருதுநகர் செந்தில் குமார நாடார் கல்லூரியில் பணியாற்றிய பொழுது ஔவையார் விழாவையும், தமிழ் மறுமலர்ச்சி நாள் விழாவையும் கொண்டாடி, அப்பகுதியில் தமிழுணர்வை ஏற்படுத்தினார்.

'கல்வி மொழியாகவும் கடவுள் வழிபாட்டு மொழியாகவும், அரசாள் மொழியாகவும், அறிவியல் மொழியாகவும் தமிழ் ஆகும் நாளே,

அது மீண்டும் மலர்ச்சி பெற்ற நாளாகும்' என்ற அவர்தம் மொழிக்கொள்கையை, தமிழ் மறுமலர்ச்சி நாள் விழாவில் வலியுறுத்தினார்.

விழாக்கள் மூலமாகத் தமிழுணர்வை ஏற்படுத்தியது மட்டுமன்றி, சங்க இலக்கியம்' 'இலக்கியம்' 'திராவிடக் கூட்டரசு' 'குறள் நெறி' போன்ற இதழ்களை, தொகை இழப்போடு நடத்தி, தமிழ்வாழத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

## துணிவாற்றலுக்கு ஓர் இலக்குவனார்:

பணியில் இருந்து கொண்டே 1938ல் சென்னை 'ஒற்றைவாடை' ' இந்தி எதிர்ப்பு மாநாட்டில்' தந்தை பெரியாருடன் மேடை ஏறி, தமிழ் முழக்கமிட்டார்.

'வகுப்புவாரி உரிமை மாநாட்டில்' பெரியாரோடு கலந்து கொண்டு உரிமை முழக்கமிட்டார்.

அமெரிக்காவில் 'இன வெறிக்கு எதிராக' மார்ட்டின் லூதர் கிங், நடத்திய " Civil Rights March" என்பதைப் பின்பற்றி, 'தமிழ் உரிமைப் பெருநடைப்பயணம் " Tamil Rights March" மேற்கொண்ட தனிப்பெரும் பேராசிரியர் இவரே !

**" மொழிகாக்க வீதிக்கு வந்த முதல் பேராசிரியரும் இவரே"**

சிறை சென்ற செம்மல் பேராசிரியர் இலக்குவனாரின் விடுதலைக்காக முப்பத்தேழு வழக்குரைஞர்கள் வாதாடிய நிகழ்ச்சி, வரலாற்றுச் சிறப்புமிக்க ஒன்றாகும்.

## உலகப் புகழ்:

பேரறிஞர் அண்ணா, அமெரிக்காவின் 'யேல் பல்கலைக்கழகத்திற்குச் சென்ற போது, இலக்குவனாரின், ஆங்கிலத் தொல்காப்பியத்தையும், ஜி.யு.போப் அவர்களின் திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்பு நூலையும், உடன் எடுத்துச் சென்று, அமெரிக்கப் பல்கலைக் கழகங்களுக்கும், போப் ஆண்டவருக்கும் அன்பளிப்பாக வழங்கி, இலக்குவனார்க்கு உலகப் புகழ் சேர்த்த பாங்கினைத் தமிழர்கள் மறந்து விட முடியுமா?

வறுமை வாட்டினாலும், வானம் பாடியாய் வாழ முடியும், வையகம் போற்றும் வளக்கொடைகள் வழங்க முடியும் என்பதை, நேர்நின்று உணர்த்தி, நிமிரச் செய்யும் வரலாறு, பேராசிரியர் இலக்குவனாரின் வரலாறு என்பது வெள்ளிடைமலை , தமிழும் தமிழர் முன்னேற்றமுமே தம்மூச்சாகவும் பேச்சாகவும் செயலாகவும் வாழ்ந்த இலக்குவனார் 3.9.1973-ஆம் நாள் இயற்கை எய்தினார்.

தமிழுக்கும், தமிழருக்கும் எழுச்சியையும், ஏற்றத்தையும் தரும் இந்நாளில், முனைவர் பேராசிரியர் இலக்குவனாரின் வழியைப் பின்பற்றித் தமிழ் வளர்த்து உயர்வோம். தலைநிமிர்ந்து வாழ்வோம்.